# பாக்கு நீரினையை முதன்முதலில் நீந்திக்கடந்து சாதனை புரிந்த மறத்தமிழனுக்கு ஒரு நினைவுச் சிலை திறப்புவிழா 25.03.2015

இச்சிறிய ஆக்கமானது நீச்சல் வீரன் நவரத்தினசாமியின் உருவச்சிலை திரை நீக்கம் மற்றும் சாதனையின் 61ம் ஆண்டு நினைவாக வெளியிடப்படுகிறது.

இலங்கையின் வடபால் யாழ்மாவாட்டத்தில் ஈழத்து திருச்செந்தூர் எனும் செல்வச் சந்நிதியான் அருட்கடாட்சம் புரியும் தொண்டைமானாற்றிலே 1909ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி உதித்தவர்தான் நீச்சல் வீரன் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி. முன்னெவராலும் கடந்திராத ஆங்கிலக் கால்வாயை வெள்ளைக்கார வீரன் ஒருவன் நீந்திக் கடந்த அதிசயச் செயலை பள்ளிப்பருவத்திலே ஆசிரியர் ஒருவர் மூலம் கேட்டறிந்த நாளிலிருந்தே தானும் ஒரு சாதனையை புரிய வேண்டுமென வேட்கை கொண்டார்.

தனது கல்வியை 19ஆம் வயதிலேயே முடித்துக் கொண்டு விவசாய இலாகாவில் கடமைக்கு சேர்ந்து அந்தத்துறையிலும் பல சாதனைகளைப் படைத்து உயர் பதவிகளையும், தனது நவீன கருவிகளின் கண்டு பிடிப்பிற்காக இலாகாவின் பாராட்டுதல்களையும் பெற்றிருந்தார்.

இல் வாழ்வில் லீலாவதி அம்மையாருடன் இணைந்து மணம் செய்து இராமச்சந்திரன், பாலச்சந்திரன், ஞானச்சந்திரன் எனும் மூன்று புத்திரர்களை ஈன்றெடுத்தனர். இச்சந்தோசமான குடும்பத்தின், சோக விளைவாக அவரது மனைவியின் அகாலமரணம் அமைந்தது.

ஏகபத்தினி விரதனாக வாழ்ந்த இச் சாதனையாளன் தனது மூன்று புதல்வர்களையும் பராமரித்து தன் தொழிலையும் பார்த்த போதும் நீச்சலில் சாதனை புரியும் வேட்கையை மட்டும் கைவிடவில்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் குடாக்கடலில் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த தமிழன்னையின் தவப்புதல்வன் துணிகரச் செயலில் இறங்கத் துணிந்தார்.

இதற்காக வீரம் செறிந்த தன் துணைவியின் ஊரான வல்வெட்டித்துறை மண் சார்ந்த ரேவடிக்கடற்கரையை தெரிந்தெடுத்தார். முதலாவது முயற்சியாக 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு அவரது மூன்று புதல்வர்களும் இலங்கை மாதாவின் சிங்கக் கொடியை பிடிக்க, நண்பர்களும் பொதுமக்களும் புடைசூழ கடலில் குதித்து சாதனையை தொடங்கினார்.

31 1/2 மைல்கள் நீளமுள்ள பாக்குநீரினையை கடக்கும் சாதனையை ஆரம்பித்து வைக்க இலங்கைப் பிரதமரின் பிரதமரின் பிரதிநிதியாக வி. நல்லையா, (பாரளுமன்ற உறுப்பினர் - M.P) வருகை தந்திருந்தார். இருந்தும் ஏறக்குறைய 35 மைல்கள் கடலில் நீந்தி 23 1/2 மணித்தியாலங்கள் அலைகளுடனும் நீர் இழுப்புக்களுடனும் போராடியும் இயற்கையை வெல்ல முடியாது இந்தியாவின் கோடிக்கரைக்கு சில மைல்களே இருந்த நிலையில் இலங்கைக்கு திரும்ப வேண்டியிருந்தது.

“பாக்குநீரிணையைக் கடந்தே தீருவேன் இல்லையேல் என் பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் கடப்பான்” எனக் கூறி மீண்டும் தனது தளராத முயற்சியை 10 நாட்களின் பின் 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ஆம் திகதி பி.ப 4.10க்கு ஆரம்பித்தார். இம்முறை, நிறைந்த பொதுமக்களுடன் பெரும் எண்ணிக்கையான அரச அதிகாரிகளும் தாய்மார்களும் வந்திருந்து வழியனுப்பினர்.

பிறந்த மண்ணும் தாய்நாடும் தமிழ்நாடும் ஏன் ஆசியாக் கண்டமே அறிந்திராத சாதனையை 26ஆம் திகதி இரவு 7மணிக்கு முருகுப்பிள்ளை நவரத்தினசாமி கோடிக்கரையேறி வெற்றிக்கொடி நாட்டினார்.

இலங்கை, இந்தியாவின் பத்திரிகைகள் பெரிய எழுத்துக்களால் தலையங்கம் இட்டு இவ்வீர சாதனையை உலகுக்கு பறை சாற்றின. இந்தியப் பிரதமர் பண்டித நேரு இலங்கைப் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல முதலிய பிரமுகர்களும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். முதலில் இந்தியாவிலேயே இவருக்கு பெரும் வரவேற்புக்கள் கிடைக்கப்பெற்றன.

வல்வெட்டித்துறை துறைமுகத்தில் 25ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்து மாலை மரியாதைகளுடன் இவரை வரவேற்றனர்.

அத்துடன் யாழ்ப்பாண நகர மேஜரால் தங்கத்திலான பதக்கம், சங்கிலி என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் வெள்ளிக் கேடயமும் பரிசளிக்கப்பட்டு வாழ்த்தப்பட்டார். இவ்வீரனை இலங்கை அரசாங்கமானது இங்கிலாந்தின் மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கும் கோமகனுக்கும் அறிமுகம் செய்து பெருமைப்படுத்தியதுடன் ஆங்கில அரசாங்கத்தின் சார்பில் வாழ்த்துமடலும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்வீரனது சாதனை தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு பெரும்பாக்கியமும் வரலாற்றுச் சான்றுமாகும். வரலாறு படைத்தவர்களை கௌரவிப்பதும் தொடர்ந்து வரும் பரம்பரையினரை வரலாறு படைக்க தூண்டுவதும் சமகால சமுதாயத்திலுள்ளவர்களது வரலாற்று கடமையாகும். இந்த வகையில் தமிழ் மக்களுக்காக போராடிய வரலாற்று நாயகர்களின் சாதனைகள் பல எமக்கு தெரிந்தும் ஆவணமாக்க முடியாத சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவற்றுள் வரலாற்று ஆவணமாக்க முடியாத பரமரகசியமான சாதனைகள் புரிந்து மண்ணோடு மண்ணான பல சாதனைகளும் வெளிவராது உள்ளன.

எது எப்படியாயினம் எமக்கு தெரிந்த, தமிழ் மண்ணின் சாதனையாளர்களின் சரித்திரங்களை நாம் மற்றயவர்க்கும் உலகிற்கும் சிறப்பாக எமது நாட்டில் வாழும் ஏனைய சமூகத்தவர்க்கும் (பிறமொழிகளாலும்) அடுத்த பரம்பரைக்கும் எடுத்துக் கூறும் ஆவணமாக்க வேண்டியது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இந்த வகையில் தமிழ் மகன் முருகுப்பிள்ளைக்கு சிலை வடித்து திறப்பது மிகவும் போற்றப்பட வேண்டிய, பாராட்டப்பட வேண்டிய, ஏனையோரால் பின்பற்றப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இந்த ரீதியில் 07 கின்னஸ் சாதனைகளைப் புரிந்தும் 20 உலக சாதனைகளை முறியடித்தும் உலகில் எவருமே சாதிக்காத சாதனைகளின் சாதனையாளனாக வல்வை மண்ணுக்கும் தமிழனுக்கும் உலகப் புகழ் பெற்றுத்தந்த **“ஆழிக்குமரன் ஆனந்தனுக்கும்”** சிலையமைத்து வல்வை மண்ணின் பெருமையை உலகறிய பறைசாற்ற பொதுமக்கள் முன்வர வேண்டுமென இத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**குறிப்பு :**
**என் பிள்ளைகளில் ஒருவன் கடப்பான் :–**
**இக்கூற்றிற்கேற்ப பின்னாளில் அதாவது 21.07.1963ல் இவரது 2வது மகனான பாலச்சந்திரன் (ஹாட்லிக் கல்லூரி மாணவன் தனது 16வது வயதினிலே 1500 அடி அகலமுள்ள ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கும் காரைநகருக்குமிடையே உள்ள கடல் நீரோட்டத்தை இரு கைகளும் இரு கால்களும் கட்டப்பட்ட நிலையில் நீந்திக் கடந்து புலிக் பிறந்தது பூனையாகுமா? என எல்லோரும் வியக்கும் வண்ணம் ஒரு சாதனையை நிலைநாட்டினார். (இது பலராலும் அறியப்படாத ஒன்றாகவே இருந்து வருபின்றது.)**

வல்வை ஜெயம்
(ந.சிவரத்தினம்.)